**கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை**
**கலைப் பீடம்**

**சிறப்புக் கலைமாணிப் பரீட்சை (புவியியல்) – பகுதி III, 2021/ 2022**
**முதலாம் பருவ இறுதிப் பரீட்சை**
**GYG 4179 - உயர்தர விவசாயப் புவியியல்**

**நேரம்: இரண்டு (02) மணித்தியாலம்**

**மூன்று (03)** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

---

1.

i. இலங்கையின் பெருந்தோட்டத்துறை தொடர்பாக சுருக்கக் குறிப்பொன்றினை எழுதுக.
(04 புள்ளிகள்)

ii. இலங்கையின் தேயிலைத் தோட்டங்களின் புவியியல் ரீதியிலான பரம்பல் தன்மையின் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விளக்குக.
(06 புள்ளிகள்)

iii. இலங்கையின் தற்போதைய தேயிலை உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் எதிர்கொள்ளும் சவால்களை உதாரணங்களுடன் ஆராய்க.
(10 புள்ளிகள்)

2.

i. தாவரங்களில் காணக்கூடிய ஊட்டச்சத்து வழிமுறைகள் யாவை?
(04 புள்ளிகள்)

ii. தாவரங்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களின் முக்கியத்துவத்தினை விவரிக்குக.
(06 புள்ளிகள்)

iii. தற்காலகட்டத்தில் ஒருங்கிணைந்த தாவர ஊட்டச்சத்து முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தினைப் பற்றி ஆராய்க.
(10 புள்ளிகள்)

3.

i. விவசாய சந்தைப்படுத்தல் கலவைக் (Agricultural marketing mix) கூறுகள் தொடர்பான வரைபடத்தினை வரைந்து, குறிப்பிடுக.
(04 புள்ளிகள்)

ii. விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துதல் மூலம் வழங்கப்படும் சேவைகளை பொருத்தமான உதாரணங்களுடன் சுருக்கமாக எடுத்துக்காட்டுக.
(05 புள்ளிகள்)

iii. பொருத்தமான உதாரணங்களைக் தந்து, தற்போது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் விவசாய உற்பத்திகள் சந்தைப்படுத்தலின் நிலைப்பாட்டினை விவரிக்குக
(10 புள்ளிகள்)

4.

i. விவசாய செய்முறைகளில் பிரயோகிக்கப்படும் உயிரின தொழில்நுட்ப (Bio technology) முறைகள் யாவை?

(04 புள்ளிகள்)

ii. பயிர் விருத்திற்கான இழைய-வளர்ப்பு (tissue culture) தொழில்நுட்பத்தின் நோக்கங்களை விளக்கவும்

(06 புள்ளிகள்)

iii. புதிய தாவரங்களை உற்பத்தி செய்வதில் இழைய-வளர்ப்பு நுட்பத்தின் நன்மைகள் மற்றும் தீமைகளை ஒப்பீடு செய்க.

(10 புள்ளிகள்)

5.

i. பயிர் செய்கை நடவடிக்கையினைத் தாக்கும் பீடைகள் (pests) யாவை?

(04 புள்ளிகள்)

ii. நிலையான விவசாய நடவடிக்கையில் பீடை முகாமைத்தவதின் முக்கியத்துவம் பற்றி விவரிக்குக.

(06 புள்ளிகள்)

iv. இரசாயன மற்றும் உயிரியல் ரீதியிலான பீடை முகாமைத்துவத்தில் எழும் பிரச்சினைகளுக்கு முன்மொழியப்பட்ட தீர்வுகளை ஆராய்க.

(10 புள்ளிகள்)

6.

i. இலங்கையின் உலர் வலய விவசாய நடவடிக்கைகளின் இயல்பினைப் பற்றி சுருக்கமாக எடுத்துரைக்க.

(04 புள்ளிகள்)

ii. இலங்கையில் உணவுப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உலர்வலய விவசாயத்தின் முக்கியத்துவம் பற்றி பரிசீலிக்குக.

(06 புள்ளிகள்)

iii. இலங்கையில் உலர்வலய விவசாயிகள் எதிர் கொள்ளும் சவால்கள் பற்றி ஆராய்க.

(10 புள்ளிகள்)

*****************************